## நற்றிணை - 51. குறிஞ்சி



**யாங்குச் செய்வாம்கொல்- தோழி! ஓங்கு**
**கழைக்**
**காம்புடை விடர் அகம் சிலம்ப, பாம்பு**
**உடன்று**
**ஓங்கு வரை மிளிர ஆட்டி, வீங்கு செலல்**
**கடுங் குரல் ஏறொடு கனை துளி தலைஇப்**
**பெயல் ஆனாதே, வானம்; பெயலொடு**
**மின்னு நிமிர்ந்தன்ன வேலன் வந்தென,**
**பின்னு விடு முச்சி அளிப்பு ஆனாதே;**
**பெருந் தண் குளவி குழைத்த பா அடி,**
**இருஞ் சேறு ஆடிய நுதல, கொல்களிறு**
**பேதை ஆசினி ஒசித்த**
**வீ ததர் வேங்கைய மலை கிழவோற்கே?**

தோழீ ! மேகமானது உயர்ந்த அடித்தண்டினையுடைய மூங்கில்கள் நிரம்பிய மலைப்பிளப்பிடமெல்லாம் எதிரொலி யெடுப்ப; பாம்புகள் வருத்தமுற்று உயர்ந்த துறுகல்மீது புரளுமாறு துன்புறுத்தி விரைந்த செலவையுடைய கடிய முழக்கமிக்க இடியேற்றுடனே மிக்க துளியைப் பெய்யத் தொடங்கி அப் பெயலை நிறுத்துகின்றிலது. பெயலொடு மின்னு நிமிர்ந்து அன்னவேலன் வந்தென அத்தகைய பெயலைக் கண்டு ஆற்றது ஏதம் அஞ்சி வேறுபட்ட என்னை உற்றதறியாது நற்றிறம் படர்ந்த அன்னை வெறியெடுத்தலும் அதற்காக மின்னலைச் செய்தமைத்தாற் போன்ற வேலைக் கையிலுடைய படிமத்தான் வந்தானாதலின்; இனிப் பின்னி விடுத்தற்குரிய கொண்டையிற் பூவைக் குலையாது காத்தலும் அரியதாயிரா நின்றது; ஆதலாற் பெரிய குளிர்ச்சியையுடைய பச்சிலை மரத்தை முரித்துழக்கின பரந்த அடிகளையுடைய கரிய சேற்றை யப்பிய நெற்றியையுடைய கொல்ல வல்ல களிற்றியானை; அறியாமையால் ஆசினியை முரித்து மலருதிர்ந்து பரவிய வேங்கை மரத்தின்கீழே தங்காநிற்கும் மலைகிழவோனுக்கு; என்ன செய்ய மாட்டுவேம்; கூறாய்,

ஆற்றாது ஏதம் அஞ்சி வேறுபட்டாள், வெறியாடலுற்ற இடத்து, சிறைப்புறமாகச்சொல்லியது. - பேராலவாயர்

**நற்றிணை - 52. பாலை**



**மாக் கொடி அதிரற் பூவொடு பாதிரித்**
**தூத் தகட்டு எதிர் மலர் வேய்ந்த கூந்தல்**
**மணம் கமழ் நாற்றம் மரீஇ, யாம் இவள்**
**சுணங்கு அணி ஆகம் அடைய முயங்கி,**
**வீங்கு உவர்க் கவவின் நீங்கல்செல்லேம்;**
**நீயே, ஆள்வினை சிறப்ப எண்ணி, நாளும்**
**பிரிந்து உறை வாழ்க்கை புரிந்து அமையலையே;**
**அன்பு இலை; வாழி, என் நெஞ்சே! வெம் போர்**
**மழவர் பெரு மகன் மா வள் ஓரி**
**கை வளம் இயைவது ஆயினும்,**
**ஐது ஏகு அம்ம, இயைந்து செய் பொருளே.**

எமது நெஞ்சமே ! கொடியையுடைய காட்டு மல்லிகைப் பூவுடனே தூய பொற்றகடு போன்ற பாதிரி மலரையும் சேர எதிர் எதிர் வைத்துத் தொடுத்துக் கட்டிய மலர் மாலையைச் சூடிய கூந்தலின்; மணங்கமழும் நாற்றத்தைப் பெற்று, யாம் அவளுடைய சுணங்கமைந்த மார்பிற் கொங்கையை ஒருசேர அணைத்துக்கொண்டு மிக்க இன்சுவையையுடைய இவள் கையால் அணைத்திருத்தலினின்றும் நீங்க மாட்டுகிலேம், நீயே ஆள்வினை சிறப்ப எண்ணிநாளும் பிரிந்து உறை வாழ்க்கை புரிந்து அமையலை நீ தானும் முயற்சியை மேம்படக் கருதி நாள்தோறும் (எம்மை) இவளைப் பிரிந்து தனித்து உறைகின்ற வாழ்வினை விரும்பிச் சிறிது பொழுதும் ஓய்கின்றனையல்லை; ஆதலின் நீ என்மாட்டு அன்பினையுடையையல்லைமன் இங்ஙனமே நெடுங்காலம் வாழ்வாயாக !; நீ உட்கொண்டு உடன்பட்டு ஈட்டும் பொருள்தான்; வெய்ய போர் செய்ய வல்ல போர்வீரர் தலைவனாகிய சிறந்த கொடையையுடைய ஓரி யென்பவனது கைவண்மைக்குப் பொருந்திய செல்வமே நீ ஈட்டும் பொருளாக நினக்குக்

கிடைக்கப் பெறினும் அப்பொருள் இவளது முயக்கத்தினும்காட்டிற் சிறந்ததன்று கண்டாய் !; அது மிக மென்மையுடையதன்றோ அதனால் வேண்டுமெனில் நீயே ஏகுவாய் யாம் வாரகில்லேம்;

**தலைமகன் செலவு அழுங்கியது.** - **பாலத்தனார்**
**நற்றிணை - 53. குறிஞ்சி**



**யான் அஃது அஞ்சினென் கரப்பவும், தான்**
**அஃது**
**அறிந்தனள்கொல்லோ?**
**அருளினள்கொல்லோ?**
**எவன்கொல், தோழி! அன்னை கண்ணியது?-**
**'வான் உற நிவந்த பெரு மலைக் கவாஅன்,**
**ஆர் கலி வானம் தலைஇ, நடு நாள்**
**கனை பெயல் பொழிந்தென, கானக் கல்**
**யாற்று**
**முளி இலை கழித்தன முகிழ் இணரொடு**
**வரும்**
**விருந்தின் தீம் நீர் மருந்தும் ஆகும்;**
**தண்ணென உண்டு, கண்ணின் நோக்கி,**
**முனியாது ஆடப் பெறின், இவள்**
**பனியும் தீர்குவள், செல்க!' என்றோளே!**

தோழீ ! தலைமகன் வைவிடுதலானே நீ துன்புற்றிருந்தனை இன்ன காரணத்தால் நீதான் இங்ஙனமாயினை என்று கூறாமல் யான் அஞ்சி அதனை மறைத்திருப்பவும். அன்னை வான் உற நிவந்த பெருமலைக் கவாஅன் ஆர்கலி வானம் தலைஇ நடுநாள் கனைபெயல் பொழிந்ª¢தன. அன்னை என்னை நோக்கி ஆகாயத்தில் மிகவுயர்ந்த பெரிய மலைப்பக்கத்தில் மிக்க இடியோசையையுடைய மேகம் மழைபெய்யத் தொடங்கி நள்ளிருளில் மிக்க மழை பொழிந்ததனாலே; கற்கள் நிரம்பிய காட்டின் கண் ஓடும் யாற்றிலே மரங்கள்காய்ந்த

சருகுகளோடு கழித்தனவாகிய முகிழ்த்த பூங்கொத்துக்களையும் அடித்துக்கொண்டு வருகின்ற புதிய இனிய நீரானது; இவளுக்குற்ற நோயைத் தீர்க்கும் மருந்துமாகும்; அதனைக் குளிர்ச்சிபெறப் பருகி ஆண்டுள்ள காட்சிகளைக் கண்ணால் நோக்கி நீராட்டத்து வெறுப்பின்றி ஆடப்பெற்றால்; இவள் மெய்யின் நடுக்கமுந் தீர்குவள், ஆதலால் ஆங்குச் செல்வீர்களாக என்று கூறினள்; ஆதலின் அவள் தான் நமது ஒழுகலாற்றை முன்னமே அறிந்து வைத்தனள் கொல் ? அன்றி அருளினாற் கூறினள் கொல் ? நம் அன்னை கருதியது யாது கொல்? ஆராய்ந்து காண் !:

வரைவு நீட்டிப்ப, தோழி சிறைப்புறமாகச் சொல்லியது. - நல்வேட்டனார்

**நற்றிணை - 54. நெய்தல்**



**வளை நீர் மேய்ந்து, கிளை முதல்செலீஇ,**
**வாப் பறை விரும்பினைஆயினும், தூச்**
**சிறை**
**இரும் புலா அருந்தும் நின் கிளையொடு**
**சிறிது இருந்து-**
**கருங் கால் வெண் குருகு!- எனவ கேண்மதி:**
**பெரும் புலம்பின்றே, சிறு புன் மாலை;**
**அது நீ அறியின், அன்புமார் உடையை;**
**நொதுமல் நெஞ்சம் கொள்ளாது, என் குறை**
**இற்றாங்கு உணர உரைமதி- தழையோர்**
**கொய்குழை அரும்பிய குமரி ஞாழல்**
**தெண் திரை மணிப் புறம் தைவரும்**
**கண்டல் வேலி நும் துறை கிழவோற்கே!**

கரிய காலையுடைய வெளிய நாராய்! நீ நின் சுற்றம் முதலாயவற்றோடு சென்று வளைந்த நீர்ப்பரப்பிலுள்ள இரையை அருந்தித் தாவிப் பறந்து வருதலை விரும்பி¢னையாயினும், இரும்புலா அருந்தும் தூச் சிறை நின் கிளையொடு சிறிது இருந்து எனவ கேள்மதி மிக்க புலவைத் தின்னுகின்ற தூய சிறகுகளையுடைய நின் சுற்றத்தோடு சிறிது பொழுது ஈண்டுத் தங்கியிருந்து என்னுடைய சொற்களைக் கேட்பாயாக!; சிறிய புல்லிய மாலைப்பொழுதானது

எனக்குப் பெரிய வருத்தஞ் செய்தலை உடையதாயிராநின்றது; அதனை நீ அறியின்; என்மாட்டுப் பெரிதும் அன்புடையையாதலால் வேறுபட்ட மனங்கொள்ளாமல்; என்குறை இத்தன்மையதென்று தழை யுடுப்பவர் கொய்தற்குரிய குழை தழைந்த இளைய ஞாழல் தௌ¤ந்த திரையின் புறத்தைத் தடவாநிற்கும் கண்டல் மர வேலிகளையுடைய நுங்கடற்றுறைச் சேர்ப்பனிடஞ் சென்று அவன் உணருமாறு உரைப்பாயாக !

காமம் மிக்க கழிபடர்கிளவி. - சேந்தங் கண்ணனார்

## நற்றிணை - 55. குறிஞ்சி



**ஓங்கு மலை நாட! ஒழிக, நின் வாய்மை**
**காம்பு தலைமணந்த கல் அதர்ச் சிறு நெறி,**
**உறு பகை பேணாது, இரவின் வந்து, இவள்**
**பொறி கிளர் ஆகம் புல்ல, தோள் சேர்பு**
**அறுகாற் பறவை அளவு இல மொய்த்தலின்,**
**கண் கோள் ஆக நோக்கி, 'பண்டும்**
**இனையையோ?' என வினவினள், யாயே;**
**அதன் எதிர் சொல்லாளாகி, அல்லாந்து,**
**என் முகம் நோக்கியோளே: 'அன்னாய்!-**
**யாங்கு உணர்ந்து உய்குவள்கொல்? என,**
**மடுத்த**
**சாந்த ஞெகிழி காட்டி-**
**ஈங்கு ஆயினவால்' என்றிசின் யானே.**

ஓங்கிய மலைநாடனே ! நீ கூறும்வாய்மைகள் எல்லாம் இப்படியே பொய்த்தொழிவனவாகுக !; மூங்கில்கள் நெருங்கிய கற்பாறை நெறியாகிய சிறிய வழியில் இரைதேடியுழலுகின்ற வேங்கை முதலாயமிக்க பகையைப் பொருட்படுத்தாது; இரவிடைவந்து இவளது திருவிளங்கிய மார்பை முயங்கி மகிழ, அதனால் உண்டாகிய புதுமணத்தைக் கருதி இவளுடைய தோளைச்சார்ந்து வண்டுகள் அளவில்லாதன மொய்த்தலினாலே; எம் அன்னை தன் கண்களாலே கொல்லுபவள் போல் நோக்கி "நீ இதன் முன்னும் இப்படி வண்டுகளால்

மொய்க்கப்பெற்ற தோளினையுடையையோ?" என்று வினவினள்; அங்ஙனம் வினவலும், இவள் அதற்கு எதிர்மொழி சொல்ல அறியாளாய் வருத்தமுற்று என் முகத்தை நோக்கி நின்றாள்; அதனை அறிந்த யான் இவள் எப்படி ஆராய்ந்து மறைத்துக் கூறி யுய்குவள் என்றெண்ணி அன்னையை நோக்கி; அடுப்பிலிட்ட சந்தன விறகின் கொள்ளியை எடுத்துக் காட்டி; அன்னாய் ! இவ்விறகினை அடுப்பிலிடுதலும் இதிலுள்ள சுரும்புகள் இவளுடைய தோளில் மொய்க்கின்றன காண் ! என மறைத்துக் கூறினேன்; இங்ஙனம் எத்துணை நாள் நீ வரைந்து கொள்ளுதல் காரணமாகப் பொய்கூறி யுய்விப்பது ?

## வரைவிடை மெலிவு ஆற்றுவிக்கும் தோழி தலைவற்குச் சொல்லியது. - பெருவழுதி

**நற்றிணை - 56. பாலை**



**குறு நிலைக் குரவின் சிறு நனை நறு வீ**
**வண்டு தரு நாற்றம் வளி கலந்து ஈய,**
**கண் களி பெறூஉம் கவின் பெறு காலை,**
**எல் வளை ஞெகிழ்த்தோர்க்கு அல்லல்**
**உறீஇச்**
**சென்ற நெஞ்சம் செய்வினைக்கு அசாவா,**
**ஒருங்கு வரல் நசையொடு,**
**வருந்தும்கொல்லோ**
**அருளான் ஆதலின், அழிந்து இவண் வந்து,**
**தொல் நலன் இழந்த என் பொன் நிறம்**
**நோக்கி,**
**'ஏதிலாட்டி இவள்' எனப்**
**போயின்று கொல்லோ, நோய்**
**தலைமணந்தே**

குறிதாக நிற்றலையுடைய குராமரத்தின் சிறிய அரும்புகள் முதிர்ந்த நறியமலரில் வண்டு விழுதலா னெழுந்த மணத்தைத் தென்றற் காற்றுப் புகுந்து கலந்துவீச; கண்கள்

அவற்றைநோக்கி மகிழ்வடைகின்ற அழகமைந்த அத்தறுவாயில்; ஒளி பொருந்திய வளையை நெகிழ்வித்தோரைக் கருதித் துன்பமுறுதலின் அவர்பாற் சென்ற என் நெஞ்சமானது; ஆண்டு அவர் செய்யும் வினைக்குச் சூழ்ச்சி சொல்லும் துணையாயிருந்து முற்றுவித்து அவருடன் ஒருசேர வருதற்கு விருப்பமுற்று வருந்தியிருக்கின்றதோ ?; அன்றி அவர் அருள் செய்யாமையாலே; கலங்கி இங்கு வந்து அஃது என்னைப் பிரியுமுன்னிருந்த நலன் இழந்துவிட்டதனாலாகிய எனது பொன்னிறமான பசலையை நோக்கி; 'இவள் அயலிலாட்டியாகும் என்னை விடுத்தவளைக் காண்கிலேன்மன் !' என்றெண்ணி நோய்மிகக் கொண்டு என்னைத் தேடிச் சென்றொழிந்ததோ? அறிகிலேன்; ஆதலின், யான் எங்ஙனம் ஆற்றுகிற்பேன்;

வரைவிடை மெலிவு ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைவி சொல்லியது. - பெருவழுதி

**நற்றிணை - 57. குறிஞ்சி**



**தடங்கோட்டு ஆமான், மடங்கல் மா நிரைக்**
**குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தென,**
**துஞ்சு பதம் பெற்ற துய்த் தலை மந்தி**
**கல்லென் சுற்றம் கை கவியாக் குறுகி,**
**வீங்கு சுரை ஞெமுங்க வாங்கி, தீம் பால்**
**கல்லா வன் பறழ்க் கைந் நிறை பிழியும்**
**மா மலை நாட! மருட்கை உடைத்தே-**
**செங் கோல், கொடுங் குரல், சிறு தினை**
**வியன் புனம்**
**கொய் பதம் குறுகும்காலை, எம்**
**மை ஈர் ஓதி மாண் நலம் தொலைவே!**

சிங்க முதலாய விலங்கின் கூட்டம் நெருங்கிய மலையின்கணுள்ள வேங்கை மரத்தின் கீழ் வளைந்த கொம்பினையுடைய ஆமான் தன் கன்றொடு தங்கியுளதாக; அவை துயில்வதனைக் கண்ட பஞ்சுபோன்ற தலையையுடைய மந்தி கல்லென வொலிக்கும் தன் சுற்றத்தை அவை ஒலியாவாறு தன்கையா லமர்த்திவிட்டு அருகிலே சென்று; ஆமானின் பால் சுரந்த மடியை

அழுந்தும்படி பற்றியீர்த்து இனிய பாலைக் கறந்து தன்தொழிலையுங் கல்லாத வலிய குட்டியின் கையில் நிறையப் பிழியா நிற்கும்; பெரிய மலை நாடனே !; சிவந்த தாளையும் வளைந்த கதிரையுமுடைய சிறிய தினையின் பெரிய கொல்லை, கொய்பதம் குறுகும் காலை முற்றுங் கதிர் கொய்யும் பதம் வந்துற்றது, வரவே, தலைமகள் மனையகம் புகுதாநிற்கும், புக்கபின் நீ அங்கே வருதற் கியலாமையின்; எமது கரிய ஈரிய கூந்தலையுடையாளது மாட்சிமைப்பட்ட நலம் கெட்டொழியுங் கண்டாய்; அங்ஙனம் கெடுவதை நோக்கி என்னுள்ளம் மருளுதலையுடையதாயிரா நிற்கும்; ஆதலின், நீ ஆய்ந்து ஏற்றபெற்றிப்பட ஒழுகுவாயாக !

## செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது. - பொதும்பில் கிழார்

## நற்றிணை - 58. நெய்தல்



**பெரு முது செல்வர் பொன்னுடைப்புதல்வர்**
**சிறு தோட் கோத்த செவ் அரிப்பறையின்**
**கண்ணகத்து எழுதிய குரீஇப் போல,**
**கோல் கொண்டு அலைப்பப் படீஇயர்மாதோ-**
**வீரை வேண்மான் வெளியன் தித்தன்**
**முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின்**
**வெண் கோடு இயம்ப, நுண் பனி அரும்ப,**
**கையற வந்த பொழுதொடு மெய் சோர்ந்து,**
**அவல நெஞ்சினம் பெயர, உயர் திரை**
**நீடு நீர்ப் பனித் துறைச் சேர்ப்பன்**
**ஓடு தேர் நுண் நுகம் நுழைந்த மாவே!**

'உறையூரின்' கண் அரசாண்ட, வீரைவேண்மான் வெளியன் என்னும் தித்தனுடைய முரசு முதலியவற்றோடு வெளிய சங்குகள் ஒலியாநிற்பச் சிறிய பனியுண்டாக வரிசையாக எடுக்கப்பட்ட விளக்குகளுடனே; சென்று எதிர் கொள்ளுகின்ற பிரிந்துறை மகளிர் செயலறும்படி வந்த மாலைப்பொழுதிலே; மெய் சோர்ந்து வருந்திய மனத்தேமாகிப் பெயர்ந்து போகும்வண்ணம்; ஓங்கி யெழுகின்ற அலைகளையுடைய நீண்ட நீர்வடிவாகிய கடலின் குளிர்ந்த துறையையுடைய சேர்ப்பனது, ஓடு தேர் நுண் நுகம் நுழைத்த மா ஓடுகின்ற தேரின் நுண்ணிய நுகத்திற் பூட்டப்பட்டுச்¢ செல்லுகின்ற குதிரைகள் தாம்; முற்செய்த தவத்தாற் பெற்ற

முதிர்ந்த செல்வரின் பொன்னணிகளையுடைய புதல்வர்; சிறிய தோளில் மாட்டிய செவ்விதின் ஒலிக்கும் பறையின் கண்ணில் எழுதிய குருவி அடி படுதல் போல; கோலைக் கொண்டு அடிக்க அதனாலே துன்பப்படுவனவாக !;

பகற்குறி வந்து நீங்கும் தலைமகன் போக்கு நோக்கி, தோழி மாவின்மேல்வைத்துச் சொல்லியது. - முதுகூற்றனார்

**நற்றிணை - 59. முல்லை**



**உடும்பு கொலீஇ, வரி நுணல் அகழ்ந்து,**
**நெடுங் கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி,**
**எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல**
**பல் வேறு பண்டத் தொடை மறந்து,**
**இல்லத்து,**
**இரு மடைக் கள்ளின் இன் களி செருக்கும்**
**வன் புலக் காட்டு நாட்டதுவே- அன்பு**
**கலந்து**
**நம்வயின் புரிந்த கொள்கையொடு,**
**நெஞ்சத்து**
**உள்ளினள் உறைவோள் ஊரே; முல்லை**
**நுண் முகை அவிழ்ந்த புறவின்**
**பொறை தலை மணந்தன்று; உயவுமார்**
**இனியே.**

அன்பு மிகுதலாலே உள்ளங் கலந்து நம்பால் விரும்பிய கொள்கையுடனே என்றுந் தன்னெஞ்சிலே எம்மை நினைந்துறையும் காதலியின் ஊர; பகற் பொழுதெல்லாம் சூழ ஆடைபரப்பி நின்று கலைத்தவழி வெளிவந்த உடும்பை ஈட்டியாலே குத்தி; மண்ணின் முழுகி மறைந்து கிடக்கும் வரிகளையுடைய நுணலையை மண் வெட்டியாலே பறித்தெடுத்து; நெடுகிய கோடுகளையுடைய புற்றுக்களை வெட்டிப் புகை மூட்டியை வைத்துழி வெளிவந்த ஈயலைத் தாழியிலே பெய்து கொண்டு; வளைதடியாலே முயலை எறிந்து பற்றிய வேட்டுவன்; இரவிடை

அழகிய தோளிலே சுமந்து வந்த பல்வேறு வகையாகிய அப்பண்டங்களைப் பொதிந்த மூடையுடனே ஏனைய கருவிகளையும் மனையகத்தே போகட்டு மறந்து; ஆங்கு மிகுதியாகப் பருகிய கள்ளின் இனிய மயக்கத்தாலே செருக்குண்டு கிடவா நிற்கும்; வன்புலத்ததாகிய காடு சூழ்ந்த நாட்டின்கண் உளதாயிரா நின்றது; அங்ஙனம் முல்லையின் நுண்ணிய அரும்பு மலர்ந்த புறவின் கண்ணதாகிய ஊரிலிருந்தாலும் அவள் உள்ளம் பொறுமையுடையதாயிரா நின்றது; இன்று செல்லாவிடில் நனி வருந்தா நிற்கும்;

### வினைமுற்றி மீள்வான்தேர்ப்பாகற்குச் சொல்லியது. - கபிலர்

### நற்றிணை - 60. மருதம்



**மலை கண்டன்ன நிலை புணர்நிவப்பின்**
**பெரு நெற் பல் கூட்டு எருமை உழவ!**
**கண்படை பெறாஅது, தண் புலர் விடியல்,**
**கருங் கண் வராஅல் பெருந் தடி**
**மிளிர்வையொடு**
**புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ் சோறு**
**கவர் படு கையை கழும மாந்தி,**
**நீர் உறு செறுவின் நாறு முடி அழுத்த, நின்**
**நடுநரொடு சேறிஆயின், அவண்**
**சாயும் நெய்தலும் ஓம்புமதி; எம்மில்**
**மா இருங் கூந்தல் மடந்தை**
**ஆய் வளை கூட்டும் அணியுமார் அவையே.**

மலையைச் செய்து வைத்தாற் போன்ற நிலை பொருந்திய உயர்ச்சியையுடைய மிக்க நெற்களையுடைய பல பெரிய சேர்களைக் கட்டி வைத்திருக்கின்ற எருமையைப் பூட்டி உழுகின்ற உழவனே !; நீ இரவிலே தூங்காது குளிர்ச்சியையுடைய இருள் நீங்கும் வைகறைப் பொழுதிலே கரிய கண்களையுடைய வரால் மீனைப் பெரியனவாகத் தடிந்த தசையாகிய ஆணத்திலே பிறழவிட்ட மிளிர்வையுடனே உணவுக்குரிய அரிசியாலாக்கிய மிக்க சோற்றுத்திரளையை; விருப்பமிக்க கையையுடையையாய் நிறைய மயக்கமேறவுண்டு நீர்மிக்க சேற்றிலே நாற்றுமுடிகளை நடுதற்கு நின் உழத்தியரோடு உடன் செல்லுவையாயின்; நீ

உழுகின்ற வயலிலுள்ள வளமிக்க கோரைகளையும் நெய்தல்களையும் களையெனக் களையாது பாதுகாப்பாய்; அங்ஙனம் பாதுகாத்து வைப்பது தான் எற்றிற்கோ எனக் கேட்டியாயின், எங்களுடைய மிக்க கரிய கூந்தலையுடைய தலைவி இப்பொழுது இற்செறிக்கப்பட்டாள், மற்றொரு பொழுது காப்புச்சிறை நீக்கப் பெறுவளேல் அவள் அவற்றுள் அழகிய கோரையை வளையமாகப் பூண்டுகொள்ளுவாள், நெய்தலந்தழையை உடையாக அணிந்து கொள்ளுவள் காண்;

## சிறைப்புறமாக உழவர்க்குச் சொல்லுவாளாய்த் தோழி செறிப்பு அறிவுறீஇயது. - தூங்கலோரியார்

## நற்றிணை - 61. குறிஞ்சி



**கேளாய், எல்ல தோழி! அல்கல்**
**வேணவா நலிய, வெய்ய உயிரா,**
**ஏ மான் பிணையின் வருந்தினெனாக,**
**துயர் மருங்கு அறிந்தனள் போல, அன்னை,**
**'துஞ்சாயோ, என் குறுமகள்?' என்றலின்,**
**சொல் வெளிப்படாமை மெல்ல என்**
**நெஞ்சில்,**
**'படு மழை பொழிந்த பாறை மருங்கில்**
**சிரல் வாய் உற்ற தளவின், பரல் அவல்,**
**கான் கெழு நாடற் படர்ந்தோர்க்குக்**
**கண்ணும் படுமோ?' என்றிசின், யானே.**

ஏடி தோழீ ! யான் கூறுகின்ற இதனைச் கேட்பாயாக ! நேற்றிரவில் வேட்கை மிகுதியாலுற்ற ஆசைப்பெருக்கமானது துன்புறுத்தலாலே வெப்பமாகப் பெருமூச்செறிந்து; அம்புபட்ட மான்பிணைபோல வருத்த முற்றேனாக; அப்பொழுது அன்னை யானுற்ற துன்ப மிகுதியை அறிந்தாள் போல என்னை நோக்கி 'என்னிள மகளே ! நீ தூங்குவாயல்லையோ என்றலும்; யான் சொல்வது வெளியிலே தெரியாதபடி மெல்ல என் நெஞ்சினுள்ளே; மிக்க மழை பொழிந்த கற்பாறை யருகிலே பூத்த சிச்சிலிப் பறவையின் வாய் போன்ற அரும்புகளையுடைய முல்லையும் பரல்கள் நிரம்பிய பள்ளங்களும் உடைய (விளங்கிய) காடு சூழ்ந்த

நாட்டையுடைய தலைமகனைக் கருதியிருப்போர்க்குக் கண்ணுறக்கமும் வாரா நிற்குமோ ? என்றேன் காண்;

### தலைவன் வரவு உணர்ந்து, தலைவிக்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது. - சிறுமோலிகனார்

**நற்றிணை - 62. பாலை**



**வேர் பிணி வெதிரத்துக் கால் பொரு நரல் இசை**
**கந்து பிணி யானை அயர் உயிர்த்தன்ன**
**என்றூழ் நீடிய வேய் பயில் அழுவத்து,**
**குன்று ஊர் மதியம் நோக்கி, நின்று, நினைந்து,**
**உள்ளினென் அல்லெனோ யானே- 'முள் எயிற்று,**
**திலகம் தைஇய தேம் கமழ் திரு நுதல்,**
**எமதும் உண்டு, ஓர் மதிநாட் திங்கள்,**
**உரறு குரல் வெவ் வளி எடுப்ப, நிழல் தப**
**உலவை ஆகிய மரத்த**
**கல் பிறங்கு உயர் மலை உம்பரஃது' எனவே?**

வேர்கள் ஒன்றோடொன்று பிணிப்புண்ட மூங்கில்களிலே காற்று மோதுதலால் உண்டாகிய ஒலிக்கின்ற ஓசையானது; தறியிலே கட்டப்பட்ட யானை வருந்தி நெட்டுயிர்ப்பெறிந்தாற் போன்றது; கோடை நிலைபெற்ற மூங்கில் பிறங்கிய சுரத்து நெறியில்; மலைவாய்ச் செல்லும் திங்களை நோக்கி நின்று சிறிது கருதி; முட்போன்ற பற்களையும் திலகமிட்ட மணங் கமழ்கின்ற அழகிய நெற்றியையும் உடைய நாள் நிரம்பிய மதித்திங்கள் என்பது ஒன்று எம்முடையதும் உண்டு; அத்திங்கள் இப்பொழுது யாண்டையதோ வெனில் முழங்குகின்ற ஓசையையுடைய வெவ்விய காற்றானது வீசுதலாலே இலையுதிர்ந்து நிழல் செய்யும் தன்மை நீங்க வெறுங் கொம்புகளாய் நிற்கின்ற மரங்களையுடைய கற்கள் விளங்கிய கரிய மலை

மீதுள்ளதாயிரா நின்றது என்று; யான் நினைத்திருந்தேன் அல்லனோ ?

முன் ஒரு காலத்துப்பொருள்வயிற் பிரிந்து வந்த தலைவன், பின்னும் பொருள்வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் செலவு அழுங்குவித்தது. - இளங்கீரனார்

**நற்றிணை - 63. நெய்தல்**



**உரவுக் கடல் உழந்த பெரு வலைப்பரதவர்**
**மிகு மீன் உணக்கிய புது மணல் ஆங்கண்,**
**கல்லென் சேரிப் புலவற் புன்னை**
**விழவு நாறு விளங்கு இணர் அவிழ்ந்து**
**உடன் கமழும்**
**அழுங்கல் ஊரோ அறன் இன்று; அதனால்,**
**அறன் இல் அன்னை அருங் கடிப் படுப்ப,**
**பசலை ஆகி விளிவதுகொல்லோ-**
**புள் உற ஓசிந்த பூ மயங்கு அள்ளல்**
**கழிச் சுரம் நிவக்கும் இருஞ் சிறை இவுளி**
**திரை தரு புணரியின் கழூஉம்**
**மலி திரைச் சேர்ப்பனொடு அமைந்த நம்**
**தொடர்பே?**

வலிமையுடைய கடலிலே சென்று மீன் பிடித்தலில் வருந்திய பெரிய வலைகளையுடைய பரதவர்; மிக்க மீன்களைக் காயப் போகட்ட புதிய மணற் பரப்பாகிய அவ்விடத்து; கல்லென வொலிக்குஞ் சேரியை யடுத்த புலவு நாற்றத்திடத்துள்ள புன்னையின்; விழாவுக்குரிய மணமுடைய விளங்கிய பூங்கொத்து ஒருசேர விரிந்து மணங் கமழா நிற்கும் அலரெடுக்கின்ற பேரொலியையுடைய இவ்வூரோவெனில்; அறமுடையதில்லை; அதனால் புட்கள் வந்திருத்தலா லுதிர்ந்த பூக்கலந்த சேற்றினையுடைய கழியாகிய இடத்தின் மீதோடும் தேரிற் பூட்டிய பெரிய பிணிப்பையுடைய குதிரைகள்; அலையெழுந்து வரும் கடனீராலே கழுவப்படுகின்ற மிக்க கடற் சேர்ப்பனொடு பொருந்திய நமது தொடர்ச்சியானது; அறனில்லாத அன்னை இற்செறித்து அரிய காவலிற் படுத்தலாலே இங்ஙனம் பசலையாகி விளிந்தொழியக் கடவதுதானோ?

அலர் அச்சத்தால்தோழி சிறைப்புறமாகச் செறிப்பு அறிவுறீஇயது. - உலோச்சனார்

## நற்றிணை - 64. குறிஞ்சி



**என்னர்ஆயினும் இனி நினைவு ஒழிக!
அன்னவாக இனையல்- தோழி!- யாம்
இன்னமாக நத் துறந்தோர் நட்பு எவன்?
மரல் நார் உடுக்கை மலை உறை குறவர்
அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்
வறனுற்று ஆர முருக்கி, பையென
மரம் வறிதாகச் சோர்ந்து உக்காங்கு, என்
அறிவும் உள்ளமும் அவர் வயின் சென்றென,
வறிதால், இகுளை! என் யாக்கை; இனி அவர்
வரினும், நோய் மருந்து அல்லர்; வாராது
அவணர் ஆகுக, காதலர்! இவண் நம்
காமம் படர் அட வருந்திய
நோய் மலி வருத்தம் காணன்மார் எமரே!**

தோழீ ! நம் காதலர் எவ்வளவு சிறப்புடையராயினும் அவர்பால் தூதுவிடக் கருதுவதனை இனி நீ ஒழிப்பாயாக!; நம்மைக் கைவிட்டாரென்று அத்தன்மையாக வருந்தாதே கொள்!; நாம் இத்தன்மையேமாகி வருந்தும் வண்ணம் நம்மைத் துறந்த அவர் நட்புத்தான் நமக்கு யாது பயன்படும் ?; மரற்பட்டையின் நாராலே பின்னிய உடையினையுடைய மலையிலிருக்கிற குறவர் தாம் அறியாமையினாலே மேற்பட்டையை அறுத்த சிறிய இலையையுடைய சந்தன மரத்தில்; வற்றல் தொடங்கி மிகக் கெடுத்து மெல்லென அந்த மரம் வறிதாமாறு அதன்கண் உள்ள நீர் அறுபட்ட வாயின் வழியே சோர்ந்து வடிந்தாற் போல; என் அறிவும் உளமும் அவரிடத்துச் சென்றொழிந்தன வாதலின் இகுளாய் ! என் உடம்பு உள்ளில் யாதும் இல்லையாய் நின்றது காண்!; இனி அவர் இங்கு வந்தாலும் என் நோய்க்குரிய மருந்தாகார் ஆதலின்; காதலர் வாராது அங்கேயே உறைவாராக; இங்குக் காமமும் அதனாலுண்டாகிய

நினைவும் நம்மை யொறுத்தலாலே வருந்திய நோய் மிக்க ஏதப்பாட்டினை நம் சுற்றத்தார் காணாதொழிவாராக!

## பிரிவிடைத் தலைவியது அருமை கண்டு தூதுவிடக் கருதிய தோழிக்குத் தலைவி சொல்லியது. - உலோச்சனார்

### நற்றிணை - 65. குறிஞ்சி



**அமுதம் உண்க, நம் அயல் இலாட்டி!-**
**கிடங்கில் அன்ன இட்டுக் கரைக் கான்**
**யாற்றுக்**
**கலங்கும் பாசி நீர் அலைக் கலாவ,**
**ஒளிறு வெள் அருவி ஒண் துறை மடுத்து,**
**புலியொடு பொருத புண் கூர் யானை**
**நற் கோடு நயந்த அன்பு இல் கானவர்**
**விற் சுழிப்பட்ட நாமப் பூசல்**
**உருமிடைக் கடி இடி கரையும்**
**பெரு மலை நாடனை 'வரூஉம்' என்றோளே.**

விட்டு விட்டுக் கரைத்துச் செல்லுதலையுடைய கான்யாற்றின்கண்ணே கலங்கும் பாசியை நீர் அலைத்தலானே அவை யாண்டும் கலப்ப; விளங்கிய வெள்ளிய அருவியினது ஒள்ளிய துறையின் கண்ணே பாய்ந்து; புலியுடனே போர்செய்தலானாகிய புண்மிக்க யானையின் நல்ல தந்தத்தை விரும்பிய அன்பற்ற வேடரின்; வில்லினின்றுவிடும் அம்புபட்டதனாலாகிய சுழன்ற அச்சத்தைத் தருகின்ற பிளிற்றலின் பேரொலியானது இடியிலுண்டாகு மிக்க முழக்கத்தைப் போல ஒலிக்கும்; பெரிய மலை நாடன் குறித்த பருவத்து வாராமையால் அவனை நாம் கருதியிருக்கும்பொழுது நம் அயல் வீட்டு மாதொருத்தி வேறொருத்தியிடம் உரையாடுகின்றவள் நமக்கு நன்னிமித்தமாகக் கிடங்கில் என்னும் ஊர் போன்ற சிறந்த இனிய சொல்லால் 'அவன் இன்னே வருகுவன்' எனக் கூறினள் காண்; அவ்வார்த்தை அசரீரியெனப் படுதலால் நம்மலை நாடன் இன்னே வரும் என யான் கருதுகின்றேன் நீ வருந்தாதேகொள் !; இங்ஙனம் நமக்கு நன்னிமித்தமாகக் கூறிய அவ் வயல்வீட்டு மாது தேவருணவாகிய அமுதத்தினை ஈண்டுக் கைவரப் பெற்று இப்பொழுதே உண்பாளாக !;

விரிச்சி பெற்றுப்புகன்ற தோழி தலைமகட்குச் சொல்லியது. - கபிலர்